## நிர்வாக அனுமதியையும் நிதிச் செலவினத்தையும் திட்டமிட்டுக் குழப்பி,

# அரசியல் உள்நோக்கத்துடன் உரிமை மீறல் பிரச்சினையை எழுப்புவதா?

## பொதுப் பணித்துறை முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு மறுப்பு அறிக்கை!

சென்னை, செப். 09–

**நிர்வாக அனுமதியையும் நிதிச் செலவினத்தையும் திட்டமிட்டுக் குழப்பி, அரசியல் உள்நோக்கத்துடன் உரிமை மீறல் பிரச்சினையை எழுப்புவதா? என்று எ.வ. வேலு அவர்கள் மறுப்பு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

**பொதுப் பணித்துறை முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:**

2021-2026 காலகட்டத்தில் நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சராக நான் பொறுப்பு வகித்தபோது, 14.01.2026 அன்று வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.6ன் வாயிலாக, 2026-2027ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 80 பணிகளுக்கு இரண்டாயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் முன்கூட்டிய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதாகவும், அதன்மூலம் அரசியலமைப்புச் சட்ட விதிகள் மீறப்பட்டதாகவும் தற்போதைய பொதுப்பணித் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா அவர்கள் கூறியிருப்பது உண்மைக்குப் புறம்பானதும், நிதிநிர்வாக நடைமுறைகளைத் திட்டமிட்டுத் திரித்துக் கூறுவதுமாகும்.

**குற்றச்சாட்டு அடிப்படையற்றது!**

14.01.2026 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 6-ஐ முழுமையாகப் படித்தாலே, தற்போதைய அமைச்சரின் குற்றச்சாட்டு அடிப்படையற்றது என்பது தெளிவாகும். அந்த அரசாணையின் 9ஆம் பத்தியில், 80 பணிகளுக்கு ரூ.2,000 கோடி மதிப்பில் வழங்கப்பட்டது “Advance Administrative Sanction” – அதாவது முன்கூட்டிய நிர்வாக அனுமதி – என்றே திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், தற்போது அனுமதிக்கப்படும் தொகை 2026-2027ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் ஒட்டுமொத்த அனுமதிக்குள் சரிசெய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையும் அதே பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2026-2027 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதி நிலை அறிக்கையில் பத்தி 112ல் நெடுஞ்சாலைதுறைக்கு முன் கூட்டிய நிர்வாக அனுமதியான ரூ.2000 கோடியையும் சேர்த்து ரூ.21,132 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு சட்டப் பேரவையின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது.

**நிதித்துறை ஒப்புதலுடன் அரசாணை!**

மேலும், இந்த அரசாணை நிதித் துறையின் ஒப்புதலின்றி வெளியிடப்பட்டதாகக் கூற முடியாது. அரசாணையின் 11ஆம் பத்தியில், 14.01.2026 நாளிட்ட நிதித் துறையின் ஒப்புதலுடன் இந்த ஆணை வெளியிடப்படுவதாகத் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இறுதியாக, “By Order of the Governor” என ஆளுநரின் ஆணைப்படி அரசுச் செயலாளரால் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

ஆகவே, எனது தனிப்பட்ட முடிவு என்றோ, சட்டமன்றத்தின் நிதி அதிகாரத்தை மீறி ரூ.2,000 கோடி செலவு செய்தேன் என்றோ கூறுவது உண்மைக்கும், அரசாணையில் உள்ள பதிவுகளுக்கும் முற்றிலும் முரணானதாகும். அரசமைப்புச் சட்டத்தின் Article 203 மானியக் கோரிக்கைகள் தொடர்பான சட்டமன்ற நடைமுறையையும், Article 204 மாநிலத்தின் தொகுப்பு நிதியிலிருந்து பணம் எடுப்பதற்கான ஒதுக்கீட்டுச் சட்ட நடைமுறையையும் குறிப்பிடுகின்றன. ஆனால், இவ்விரு Articles-லும் எதிர்வரும் நிதியாண்டுக்கான பணிகளுக்கு முன்கூட்டிய நிர்வாக அனுமதி வழங்கக்கூடாது என்று எங்கும் கூறப்படவில்லை.



ஒரு பணிக்கு நிர்வாக அனுமதி வழங்குவது வேறு; அரசின் தொகுப்பு நிதியிலிருந்து உண்மையில் பணத்தை எடுத்துச் செலவிடுவது வேறு. அரசமைப்புச் சட்டத்தின் Article 204(3) தடை செய்வது, சட்டப்படி செய்யப்பட்ட ஒதுக்கீடு இல்லாமல் தொகுப்பு நிதியிலிருந்து பணம் எடுப்பதைத்தான். இந்த அரசாணையின் மூலம் ரூ.2,000 கோடி தொகுப்பு நிதியிலிருந்து எடுக்கப்பட்டதாகவோ, செலவிடப்பட்டதாகவோ சொல்லமுடியாது.

**தொகுப்பு நிதியிலிருந்து எடுக்கப்பட்டதாக சொல்ல முடியாது!**

அரசாணையின் பத்தி 10-ல் செலவினம் பதிவு செய்யப்பட வேண்டிய கணக்குத் தலைப்புகள் குறிப்பிடப்பட்டிருப்பது, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.2,000 கோடி செலவிடப்பட்டது எனச் சொல்லமுடியாது. அரசுக் கணக்கில் செலவினம் எந்தக் கணக்குத் தலைப்பின்கீழ் வகைப்படுத்தப்பட வேண்டும் என்பதை மட்டுமே அது குறிக்கிறது. சட்டப்படியான நிதி ஒதுக்கீட்டிற்கு உட்பட்டே உண்மையான செலவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

**நிதி நிர்வாக நடவடிக்கை!**

நெடுஞ்சாலைப் பணிகள் என்பது ஒரே நாளில் தொடங்கி முடிக்கக்கூடியவை அல்ல. கள ஆய்வு, விரிவான திட்ட அறிக்கை, நிலம் மற்றும் கட்டமைப்புகள் தொடர்பான ஆய்வு, மதிப்பீடு, தொழில்நுட்ப ஒப்புதல், ஒப்பந்தப்புள்ளி மற்றும் பணியாணை போன்ற பல்வேறு கட்டங்கள் அதில் உள்ளன. எனவே, ஒரு நிதியாண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கான நிர்வாக நடவடிக்கைகளை முந்தைய நிதியாண்டிலேயே தொடங்குவது, வளர்ச்சிப் பணிகள் தாமதமின்றி நடைபெறுவதற்கான வழக்கமான நிதிநிர்வாக நடவடிக்கையாகும்.

பொதுவாகவே ஒப்பந்தப்புள்ளி கோரப்படுவதால் மட்டும் ஒப்பந்ததாரர்களுக்குப் பணம் செலுத்தப்பட்டதாகக் கருத முடியாது. எந்தப் பணிக்காக, எந்தத் தேதியில், எந்த நிதியாண்டின் ஒதுக்கீட்டிலிருந்து, எவ்வளவு தொகை உண்மையில் செலவிடப்பட்டது என்பதுதெரிவிக்கப்படவில்லை. எனவே, முன்கூட்டிய நிர்வாக அனுமதியை உண்மையான நிதிச் செலவினமாகத் திரித்து, அரசமைப்புச் சட்டத்தின் Articles 203 மற்றும் 204 மீறப்பட்டதாகக் கூறுவது சட்டரீதியாக நிலைக்கக்கூடிய குற்றச்சாட்டு அல்ல. இதில் சட்டமன்றத்தின் உரிமையையோ மாண்பையோ பாதிக்கும் எந்தச் செயலும் நடைபெறாததால், உரிமை மீறல் பிரச்சினை எழுவதற்கே இடமில்லை.

**உரிமை மீறல் என்ற பேச்சுக்கே இடமில்லை!**

எனவே, அரசியலமைப்புச் சட்டத்தின் 202 முதல் 206 வரையிலான உறுப்புகளை நான் மீறியதாகக் கூறுவது சரியல்ல. நிர்வாக அனுமதி வழங்குவதற்கும், தொகுப்பு நிதியிலிருந்து பணம் எடுத்துச் செலவிடுவதற்கும் இடையிலுள்ள அடிப்படை வேறுபாட்டை மறைத்து, அரசியல் ஆதாயத்திற்காக உரிமை மீறல் பிரச்சினை எழுப்பப்பட்டுள்ளது. இவ்விவகாரத்தில் நான் சட்டமன்றத்தையோ, பேரவைத் தலைவரையோ, பேரவையின் உரிமைகளையோ எந்த வகையிலும் அவமதிக்கவில்லை; பேரவையின் மாண்பைக் குறைக்கும் எந்தச் செயலிலும் ஈடுபடவில்லை. ஆகவே, இதில் உரிமை மீறல் என்ற பேச்சுக்கே இடமில்லை.

இதைப் போன்ற அரசு ஆணைகள் இதற்கு முன்பும் வெளியிடப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக மாநில நெடுஞ்சாலைகள், மாநகராட்சி சாலைகள், புறவழிச்சாலைகள் ஆகியவற்றை விரிவாக்கம் செய்து மேம்படுத்த ரூ.13967.10 கோடிக்கு அ.தி.மு.க. ஆட்சியில் ஒப்புதல் வழங்கப்பட்டு அரசு ஆணை எண்.16 நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை நாள்:29.1.2021ல் ஆணை பிறப்பிக்கப்பட்டு இத்தொகையை ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின்கீழ் மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. முதல் ஆண்டில் ரூ.5313 கோடியும், இரண்டாம் ஆண்டு ரூ.5450.30 கோடியும் மூன்றாம் ஆண்டில் ரூ.3230.80 கோடியும் பெற்று திட்டம் நிறைவேற்றப்பட்டது. என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

சட்டமன்ற உரிமை என்பது அரசியல் பழிவாங்கலுக்கான ஆயுதமல்ல. உண்மையான உரிமை மீறல் நிகழ்ந்துள்ளதா என்பதைத் தீர்மானிப்பதற்கான உயரிய நடைமுறையாகும். எனவே, நிர்வாக அனுமதியையும் உண்மையான நிதிச் செலவினத்தையும் குழப்பிக் கொள்ள வேண்டாம்.

இவ்வாறு எ.வ.வேலு தனது மறுப்பு அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## 100 சதவீதம் எங்களுக்கு வெற்றி வாய்ப்பு உள்ளது!

# த.வெ.க. ஆட்சியின் அவலங்களை மக்களிடத்தில் எடுத்துச் சொல்லி வெற்றி பெறுவோம்!

## மதுராந்தகம் தொகுதி கழக வேட்பாளர் இ.பரந்தாமன் பேட்டி!

சென்னை, செப்.10–

மதுராந்தகம் தொகுதி வேட்பாளர் – தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் அளித்த பேட்டி வருமாறு :

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், கழகத் தலைவர் அவர்கள், மதுராந்தகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வேட்பாளராக முன்னாள் அமைச்சர் அண்ணன் அன்பரசு அவர்களும், மாவட்டக் கழகத்தினுடைய செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான அண்ணன் சுந்தர் அவர்களுடைய பரிந்துரையை ஏற்று, கழகத் தலைவர் அவர்களும், கழகத்தினுடைய இளைஞரணிச் செயலாளர் அவர்களும், கழகத்தினுடைய பொதுச் செயலாளர் உள்ளிட்ட தலைமைக்கழக நிர்வாகிகள் அனைவரும் என்னை இன்றைக்கு மதுராந்தகத்தில் போட்டியிடுவதற்கான வாய்ப்பினை நல்கியிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கிற நான், த.வெ.க. ஆட்சியினுடைய அவலங்களை மக்களிடத்தில் எடுத்துச் சொல்லி, திராவிட முன்னேற்றக் கழகம் அந்தத் தொகுதியில் வெற்றி பெற்று, வெற்றிக் கனியைப் பறித்து, எங்களுடைய தலைவரிடத்திலே சமர்ப்பிப்போம். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தோழர்கள் களத்தில் என்றைக்கும் வலிமையாகவும், வலுவாகவும் இருக்கக்கூடியவர்கள்.

**ஏமாற்றம் தரும் ஆட்சி!**

கடந்த 100 நாட்களாக இந்த அரசு எப்படிப்பட்ட அவலநிலையை அடைந்திருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. எதிர் பார்த்த மக்களுக்கு ஏமாற்றத்தைத் தந்திருக்கிறது.



திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் ஆட்சியில் எந்த அளவுக்கு நாங்கள் எல்லாம் மகிழ்ச்சியாக இருந்தோம் என்று மக்கள் சொல்லி வருகிறார்கள். இந்த அரசின் திட்டங்கள் சென்றடையவில்லை. விலைவாசி அதிகமாக உயர்ந்திருக்கிறது. மின் கட்டணம் அதிகமாக உயர்ந்திருக்கிறது.

அரசினுடைய சமூகநலத் திட்டங்கள் எல்லாம் ஒவ்வொரு தனிநபரையும் சென்று அடையவில்லை. முதியோர் உதவித்தொகை பலருக்குக் கிடைக்கவில்லை. கைம்பெண்கள் உதவித்தொகை பலருக்குக் கிடைக்கவில்லை. இதுபோன்ற எண்ணற்ற பிரச்சினைகள் இருக்கின்றன.

**ஆட்சியின் அவநிலையை வீடு வீடாக எடுத்து செல்வோம்!**

இவற்றை எல்லாம் நாங்கள் வீடு வீடாகச் சென்று எடுத்துச் சொல்லி, எங்கள் வெற்றிக் கனியைப் பறிப்போம்.

எங்களுடைய சாதனைகளைச் சொல்லி நாங்கள் வாக்குக் கேட்போம். எங்களுடைய தலைவரை முன்னிறுத்தி நாங்கள் வாக்குக் கேட்போம்.

இடைத்தேர்தல் ஆளும் கட்சிக்கு பலமாக இருக்குமா என்ற செய்தியாளர் கேள்விக்கு..

இதுவே ஒரு மைனாரிட்டி கவர்மென்ட். அவர்களுக்கு என்ன பெரிய பலம் இருக்கிறது? கழகத் தொண்டர்கள் எங்களோடு இருக்கிறார்கள். மக்கள் எங்களோடு இருக்கிறார்கள். நிச்சயமாக நல்ல உள்ளங்கள் எங்களோடு இருக்கின்றன. நாங்கள் வெற்றி பெறுவோம். எங்களுக்கு 100% வெற்றி வாய்ப்பு இருக்கிறது.

இவ்வாறு இ.பரந்தாமன் பேட்டியளித்தார்.

---

## புதுச்சேரி மாநிலம் –

# தட்டாஞ்சாவடி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் 2026 தி.மு.கழக வேட்பாளர்

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு



**வருகிற 06-10-2026 அன்று நடைபெற உள்ள புதுச்சேரி மாநிலம், தட்டாஞ்சாவடி சட்டப்பேரவைத் தொகுதி இடைத் தேர்தலில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் திரு. சேது (எ) சேது செல்வம் அவர்கள் கழக வேட்பாளராக போட்டியிடுவார்.**

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18.
நாள் : 09-09-2026.

மு.க.ஸ்டாலின்
தலைவர்,
தி.மு.க.

---

# முதல்வர் ஜோசப் விஜய் மீது உரிமை மீறல் புகார்!

## சபாநாயகரிடம் தி.மு.க. துணை கொறடா கோவி.செழியன் மனு!

சென்னை, செப். 10–

தமிழக சட்டப் பேரவையில் முதல்வர் விஜய் காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்கு பதிலளித்து பேசினார். இந்நிலையில், சட்டப் பேரவையில் சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகரை நேற்று முந்தினம் அவரது அறையில் தி.மு.க. துணை கொறடா கோவி.செழியன் மற்றும் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் சந்தித்தனர்.

அப்போது, முதல்வர் விஜய் ஆற்றிய பதிலுரை யில் இடம்பெற்றதாகக் கூறப்படும் கருத்துகளை சுட்டிக்காட்டி, அவை தமிழ்நாடு சட்டப்பேரவை விதிகளுக்கு எதிரானவை எனக் கூறி உரிமை மீறல் புகார் மனுவை சபாநாயகரிடம் அளித்தனர். மேலும், சட்டப் பேரவையின் மாண்பையும் விதிகளையும் கருத்தில் கொண்டு, இந்தப் புகார் குறித்து உரிய முறையில் பரிசீலித்து, முதலமைச்சர் விஜய் மீது தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தி.மு.க. தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த புகாரில், கடந்த கால அரசியல் மற்றும் ஆட்சி நிர்வாகம் தொடர்பான பல்வேறு விவகாரங் களை குறிப்பிட்டுப் பேசியதாக திமுக தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. குறிப்பாக, குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாமல் நிராகரிக்கப் பட்டாத சர்க்காரியா கமிஷன் தொடர்பான விவகாரத்தை சட்டப்பேரவையில் முதல்வர் குறிப்பிட்டுப் பேசியது, அவை விதிகளுக்கு எதிரானது என திமுக தரப்பு தெரிவித்துள்ளது.

மேலும், அவையில் இல்லாத முன்னாள் முதல்வர் கலைஞர் மற்றும் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் ஆகியோர் குறித்தும் முதல்வர் தனது உரையில் பேசியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல், நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகள் தொடர்பாக சட்டப்பேரவையில் விவாதிப்பதும் அவை விதிகளுக்கு முரணானது என திமுக தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

---

## மானாமதுரை நகர் மன்றத் தலைவர்

# மாரியப்பன் கென்னடி தந்தை சோனைமுத்து மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 10–

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:–

மானாமதுரை சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினரும் மானாமதுரை நகர்மன்றத் தலைவரும் கழக ஆதி திராவிடர் நலக்குழு இணைச் செயலாளருமான மாரியப்பன் கென்னடி அவர்களின் தந்தையார் சோனைமுத்து அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

ஓய்வு பெற்ற தலைமையாசிரியராகக் கல்விப் பணியாற்றி, தமிழ் மீதும், திராவிட இயக்கத்தின் மீதும் பற்றுகொண்டு திகழ்ந்த அன்புத் தந்தையை இழந்து வாடும் சகோதரர் மாரிமுத்து கென்னடி மற்றும் அவர் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

## முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து செப்.12 –அன்று

## முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமி தலைமையில்

# திண்டுக்கல்லில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!


### மாவட்டச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ. - ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

திண்டுக்கல், செப். 10–

முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து செப் 12- அன்று திண்டுக்கல்லில் முன்னாள் அமைச்சரும் கழக துணைப் பொதுச் செயலாளருமான ஐ.பெரியசாமி தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறதென்று திண்டுக்கல் கிழக்கு, மேற்கு மாவட்டச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ., ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் அறிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–





சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து திண்டுக்கல் மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் வருகிற 12.09.2026, சனிக்கிழமை, காலை 09.00 மணியளவில் திண்டுக்கல், மணிக்கூண்டு, மாநகராட்சி அலுவலகம் அருகில் கழக துணைப் பொதுச் செயலாளரும், முன்னாள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான இ.பெரியசாமி எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையிலும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் உணவுத்துறை அமைச்சருமான அர.சக்கரபாணி எம்.எல்.ஏ. அவர்கள் மற்றும் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோரின் முன்னிலையிலும் நடைபெறவுள்ளது.

அதுசமயம் இக்கூட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன் பிறப்புகள், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள், இந்நாள் பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் இந்த மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.